உ

முருகன் துணை

3071

# ஸ்ரீ கி. வா. ஜ. ஐயா

அவர்கள்



# நினைவு அஞ்சலி

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

நீர்வேலி

13—11—1988.


37660/3071

உ

# முருகன் அநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியா ஒளியாய்க்
கருவாய் புயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் யருள்வாய் குகனே.

Dr. U.V. Swaminatha Iyer Library
Besant Nagar
Chennai-90



உ

முருகன் துணை



# சமர்ப்பணம்

மாபெரும் தகப்பன் ஒருவரின் வரலாற்றில் மகன் ஒருவர் புதிய யுகத்தைத் தோற்றுவித்தார். அந்தப் பேராசிரியருக்குத் தன் மைந்தர்களிலும் பார்க்க இன்னொரு பெருமகனிடத்து அளப்பரும் பிணைப்பு, அன்புப் பிணைப்பு, அவ்விருவருள் ஒருவரை ஒருவர் ''மாறிப்புக்கிதயம் எய்தினர்'' இந்தச் செயல் உலக விசித்திரங்களுள் ஒன்று. இதற்கு எடுத்துக்காட்டு கிடைப்பதரிது. நான் இங்கே குறிப்பிடும் பேராசிரியர் - பெருந்தந்தை, ஆசிரியர் மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யா பூஷணம், டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் மாணவர் வாகீச கலாநிதி, திருமுருகாற்றுப்படை அரசு, தமிழ்க்கவி பூஷணம், தமிழ்ச் செல்வர், திருநெறித் தவமணி, தமிழ்ப் பெரும் புலவர், வித்துவான், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையா அவர்களே.

இந்த அடைமொழிகள் எல்லாம் அவர்கள் பெற்ற பட்டங்களே. இவைகளுக்கு மேலாக ''முருகனருள் பெற்ற முனிவன்'' என்பதே எமக்கு மிகவும் உவப்புத் தருவது. ஏனெனில் அவர்கள் எங்கள் வீட்டில் தங்கும் காலங்களிலெல்லாம் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது காலை நியமம் முடிந்ததும் ஆடாமல் அசையாமல் கண்மூடித் தியானத்தில் ஆழ்ந்திருப்பார்கள்.

நாங்கள் அந்நேரம் எவ்வித சப்தமுமில்லாமலும் வேறு வித இடையூறுகள் இல்லாமலும் பார்த்துக்கொள்வோம். தியானம் முடிந்ததும் என்னை '' ராணி '' என்று அன்பாக அழைப்பார்கள். நான் உடனே ஓடோடிச்சென்று அவரைக் கும்பிட்டு ஆசி பெறுவேன். அதன் பின் எங்கள் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வருவார். அதன்பின்பே எல்லோரும் அவரை வணங்குவார்கள். பின்னர் நான் கொடுக்கும் பால் சாப்பிட்டுவிட்டு எங்களை எல்லாம் பக்கத்திலிருத்தி சுவாரசியமாக உரையாடுவார்கள்.

இதற்கிடையில் நம் வீட்டு விருந்தையில் அவரைக் காணவும், தரிசிக்கவும், தத்தமது ஊர்களுக்கு அழைக்கவும் நிறையப் பேர் வந்திருப்பார்கள். எங்களூர்க்காரர்கள் எல்லாம் பழம், காய்கறி, பால் என்பன கொண்டுவந்து கொடுப்பார்கள். பண்டிதர் முருகேசு, பார்த்தசாரதி என்கின்ற முத்துவேற்பிள்ளை, செ. பொன்னம்பலம், மில்க்வைற் - க. கனகராசா, பண்டிதர் ச. சுப்பிரமணியம், எங்கள் பெரிய தகப்பனுர் பஞ்சாட்சரசர்மா போன்றேரும் (1975-க்குப் பின்) என் நாயகரும், சித்தப்பாக்களுடனும் சிறிது நேரம் தமாஷாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

இடைக்கிடையே கடிதங்களும் வரும், கடிதங்களுக்கும் பதில் எழுதிவிடுவார்கள். புதினப் பத்திரிகை பார்ப்பார்கள். 9-00 மணியானதும் எங்கள் தந்தையாரை அழைத்து இன்று எங்கெங்கே செல்லவேண்டும், எங்கே சொற்பொழிவு இருக்கின்றது என்பதை விசாரித்து அறிந்துகொள்வார்கள். எவராவது தங்கள் பாடசாலை அல்லது கோவில் அல்லது ஸ்தாபனம் எதற்காவது வரச்சொல்லி அழைத்தால் '' எல்லாம் குருக்களிடமே பேசிக் கொள்ளுங்கள், அவரிடம்தான் என் பொறுப்பு முழுவதும் '' என்று கூறுவார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தாயார், ஐயா அவர்கள் வரப்போகிறுர் என்றுல் ஒரு கிழமைக்கு முன்பே அவருக்கு வேண்டியதான ஏற்பாடுகள் செய்து அவர் வந்ததும் காலை, மாலை, மத்தியானம் உணவுகளை எல்லாம் வகை வகையாகவும், அவருக்கு ஏற்றமாதிரியும் அமைத்து அவர் சாப்பிடும் போது தெய்வத்துக்கு நெய்வேதனம் செய்வதைப் போல் அன்புடன் பரிமாறி உபசரிப்பார்கள்; அடிக்கடி அவரை வணங்கிக் கொள்வார்கள்; அவர் முன்னுல் ஏதும் சொல்லவேண்டி நின்றுல் மிகவும் பணிவுடனே சொல்வார்கள். ஐயாவும் அம்மாவின் மேல் மிகுந்த அன்புடையவர்கள். ''மிகவும் அருமையாக இருக்கிறது, எங்களூர்ச் சாப்பாடேதான் '' என்று கூறுவார்கள்.

இலங்கையில் எப்பகுதி விழாவுக்கு வருவதென்றாலும் முன் கூட்டியே எங்கள் தகப்பனாருக்கு எழுதி, வரலாமா என்று விசாரித்து அறிந்தே வருவார்கள். என்னே அவர்தம் பெருந்தன்மை. பத்து வயதுமுதல் அவர்கள் போகுமிடமெல்லாம் என்னையும் அழைத்தே செல்வார்கள். மூன்று முறை அம்மா அவர்களுடன் வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் வரும்போதெல்லாம் எனக்கென்று ஏதாவது பெறுமதியான பொருளே கொண்டுவந்து தருவார்கள். என்னுடைய திருமண காலத்திலே மிக விலை உயர்ந்த பட்டுப்புடவையும், வாழ்த்துப்பாவும் தந்திருக்கிறார்கள்.

என்னே! விதியின் கொடுமை. திடீரென்று காலன் தனது கைவரிசையைக் காட்டிவிட்டான். எங்களால் தாங்க முடியாத பேரிழப்பு. ஒவ்வொரு நாளும் அவர்கள் படத்தை அலங்கரித்து 13 நாட்கள் பிரார்த்தனை செய்து வந்தோம். ஏராளமானவர்கள் வந்து பார்த்துத் தரிசித்தும், பங்குபற்றியும், அநுதாபச் செய்தி எழுதியும் சென்றிருக்கிறார்கள்.

கந்தசஷ்டி உற்சவ காலமானதினால் எம் தந்தையார் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள உடன் செல்ல முடியவில்லை. அவருக்கும் ஒரே கவலைதான். எமது கவலையை மறப்பதற்காகவும், அவரை எந்நேரமும் நினைவு கூருவதற்காகவும் இச் சிறு மலரினை எங்கள் தந்தையாரைக்கொண்டு தயாரித்து அவருடைய பாத கமலங்களில் எம் குடும்பத்தவர்கள், எம் ஊரவர்கள் எல்லோருமாகச் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

இங்ஙனம்,

அமரர் ஸ்ரீ கி. வா. ஜ. ஐயாவின்
அன்பினால் கட்டுண்ட பெறுமகள் என்று
என்னை அன்புடன் அழைக்கும்,

**இந்திரா - பஞ்சாபகேசன்**

மற்றும்

சு. இராஜேந்திரக்குருக்கள் - ஈஸ்வரி அம்மா
சுவாமிநாதசர்மா
வாலாம்பிகை . நடராஜ ஐயர்
சிவானந்தவல்லி - விசுவநாதசர்மா
சௌதாமினி, உமா, பிரியா

அவருடன் நிழல்போல் பின்தொடர்ந்து சேவை புரியும்,

சு. சோமாஸ்கந்தசர்மா
சு. கனகசபாபதிசர்மா

உ

வேலும் மயிலும் துணை



# குலதெய்வ வணக்கம்

வரங்கொண்ட உமைமுலைப்பால்
மனங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறையிறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன்
கண்ணை விட்டுநீங்காவே !

ஸ்ரீ கி. வா. ஜ. ஐயா அவர்கள் தாம் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் எல்லாவற்றிலும் முதலில் குலதெய்வ வணக்கமாக இதனைப் பாடித் துதித்தே நிகழ்த்துவார்கள்.



பலாலி விமான நிலையத்தில்
கி. வா. ஜ. தம்பதிகள்

உ

முருகன் துணை

சிவமயம்

# குரு வணக்கம்

நவையேறு நெஞ்சினேன்
நற்றமிழைக் கற்றே
அவையேற வைத்தருளும்
அண்ணல் — சுவையேறு
செந்தமிழ்ப்பன் னூல்விளங்கும்
சீர்ச்சாமி நாதகுரு
அந்தளிர்தாள் சென்னிக் கணி.

ஸ்ரீ கி. வா. ஜ. ஐயா அவர்கள் தாம் நிகழ்த்திவரும் எந்தச் சொற்பொழிவிலும் இதனை முதலில் பாடி ஆசிரிய வந்தனம் செய்தே தொடங்குவார்கள்.

உ

முருகன் துணை

# என்னுரை

உயர்திரு. கி: வா. ஜ. ஐயா அவர்களின் வாழ்வு தமிழரின் வாழ்வு. எனவே அவர்களுடைய இழப்பு தமிழின் இழப்பு. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் தலைமாணுக்கராக இருந்து தமிழ்பயின்று அவர்களின் அருந்தமிழ்ப் பணிக்கும் துணையாய் நின்று ''கலைமகள்'' பத்திரிகையால் இலக்கியத் தொண்டாற்றி, இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு, இலங்கை - இந்தியா முதல் பிறதேசங்களில் பல ஆயிரக்கணக்கான கூட்டங்களில், மகாநாடுகளில் சொற்பெருக்காற்றி தமிழ்ப் பணிக்கும் சமயப் பணிக்குமே தம்மை அர்ப்பணித்துக்கொண்டிருந்த ஐயா அவர்கள் 4-11-88 பிற்பகல் 4-30க்கு மறைந்துவிட்டார்கள்.

இச் செய்தியையும் தற்செயலாக (நான் ரி. வி. பக்கமே போவதில்லை, அப்படியிருந்தும்) அன்றிரவு '8-40 மணிக்கு தூரதர்ஷனியில் பார்க்க நேரிட்டது. அவரின் வீட்டில் இருக்கும் தெய்வத் திருவுருவம் கிடத்தியிருக்கும் காட்சியையும் (மணிவிழாவின்போது என்னுல் அணியப்பெற்ற ரோஜா மாலைகளுடன் ஐயா - அம்மா இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படம் ஹாலில் தொங்குகிறது) அந்தப் படத்தையும் பார்த்ததுமே நான் கற்சிலையாகிவிட்டேன். சிறிது நேரமாகிவிட்டது சுயநினைவு வர. ஒரே கவலை, இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உடன் செல்ல முடியவில்லையே என்று.

ஏனெனில் நான் வழிபடும் (ஏன் ஐயாவுமே வழிபடும்) முருகனுக்கு கந்தசஷ்டி உற்சவம் ஓரிரு தினங்களில் நடக்கவிருந்ததால், அந்தக் கட்டுப்பாட்டுக்கமைய செல்ல முடியவில்லை. ஏதோ எங்களால் இயன்றளவு செய்ய முடிந்ததான பிரார்த்தனை மூலம் முருகப்பெருமானை வேண்டுவதைத்தவிர வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. நாள் தோறும் மாலை பிரார்த்தனைகள் நடாத்தி வந்தோம். பலர் கலந்து கொள்வார்கள். பின்னர் எதிர்பாராத காரணங்களால் ''விஸா''வும் கிடைக்கவில்லை. ஆகவே எங்களால் இயன்ற காணிக்கையாக என் மகளின் விருப்பத்திற்கமையவும் இதனைச் சமர்ப்பிக்கின்றேம்.

அன்புடன்,
முருகன் அருள்பெற்ற முனிவரைத்
தந்தையாகப் போற்றும்
**சு. இராஜேந்திரக் குருக்கள்**

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.



நீர்வைக் கந்தன் ஆலயத்தில் சொற்பொழிவாற்றுகிறர்.

உ

முருகன் துணை



# முருகன் அநுபூதி

எண்கொள்ளாப் பெரும்புகழ்சேர் சிலம்புத் தாளும்
இடையிலங்கும் பொன்னுடை எழிலும் மார்பில்
விண்கொள்ளாத் தேவரெலாம் போற்றும் தாரும்
விளங்குமணி மதாணியும்கை வேலும் வீரத்
திண்கொள்ளா மற்பொங்கித் திரண்ட தோளும்
திருமுகமும் இருவிழியும் கொண்டைப் பாங்கும்
கண்கொள்ளாப் பேரழகு பொங்க நிற்கும்
காட்சியிலே முருகனெதிர் நின்றான் அம்மா !

கண்காணும் பேரழகும் கருத்திற் காணும்
கதிருருவும் இளமுருகன் அருளால் காண்பார்
பண்காணும் பாட்டிசைப்பார்; இன்ப துன்பப்
பகுதியின்வேற் றுமைஅறியார்; ஞானா னந்தத்
தண்காணும் அருட்கடலில் குளிப்பார்; தேகம்
தாங்கினும்ஒட் டாதிருக்கும் தகைமை காண்பார்;
மண்காணும் சுவைமறந்து தனித்த மோன
வானத்திற் பறக்கும்அநு பூதி ஆர்வார்.

" ஜோதி "



# "பெருவாழ்வு"

இ. முருகையன்
( யாழ். பல்கலைக் கழகம் )

பகைபோல் நினைந்து, பயமாகி,
பலபேர் அணைந்து பழகாத
தொகையான சங்க முதனூல்தம்
சுவை ஓது கின்ற தொழிலாளீ!
திகழ் சாமிநாத குரவோனின்
செயல் நீள வந்த ஒரு மாணீ!!
ஜகந்நாதன் என்ற திருவாளா,
தமிழ்நாடு கண்டபெருவாழ்வே.

புலவோர் விரும்பு தமிழ் ஆய்வே
பொருளாய் வணங்கும் அடியானே!
சலியாமல் இன்சொல் பொழிவானே,
தளரா தெழுந்த பணியாளா,
கலைஞான நன்மை நிறை தூயா,
கவிதா விருந்து நுகர்வோரின்
உலையாத நண்ப—உறுதோழா!
உணர்வாய் நிரம்பி ஒளிர்வோனே.

மடைபோய் உடைந்து வெளியேறி
வருவாரி வென்ற உரையாளா
விடைவேணும் என்று விழைவோரின்
விரிவான கோரல் நிறைவேறக்

கொடை ஈவுவந்த குணசீலா,
குறையாத சொந்த நினைவாளா!
—அடடா!— தெளிந்த பதகாரா
அயரா துயர்ந்த பெரும் ஆளே.

உரைகாரர் என்ற பழையோரும்
ஒருமூலை சென்று புகுமாறு
விரிவாய் அகன்ற, எளிதான
மிளிர்வான பண்பு நயனாய்வு
பரிவோடு தந்து பழநூலின்
பயனாய் அமைந்த செயல்வீரா
முருகோனில் என்றும் உலவாத
முதிர்காதல் கொண்ட முனைவோனே.


'இதுகாறும், இன்றும் இனிமேலும்,
எவரேனும் இல்லை இணையாக;
புதிதே இவன்செய் திருவேலை;
புகழாளன்;' என்று பிறர்பேச
இதமாக நின்று பலவூழி
இசையோ டியைந்து பெயர்வாழி;
மதஞான சிந்தை வழி வாழி;
மனமேல் இவர்ந்த ஒளி வாழி.

---

( மாணி — மாணவன்; தெளிந்த பதகாரன் - சொற்களைத் தெளிவாய்ப் பிரயோகிப்பவன் )



ஸ்ரீ கி. வா. ஜ. ஐயா அவர்களுக்கு நீர்வைக் கந்தன் ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்பின்போது பண்டிதர், நீ. சி. முருகேசு வரவேற்புரை நிகழ்த்துகிறுர். பேராசிரியர், பாலமுருகன், பார்த்தசாரதி ஆகியோர் காணப்படுகின்றனர்.



பலாலி விமான நிலைய வரவேற்பு

அவருடன் போட்டோ N. ராமகிருஷ்ணு, கரூர் கண்ணன், ஹரன் ஐயா, அம்மா அவர்கள், குருக்களின் மகள் இருவர், பார்த்தசாரதி முதலானேர்.

# இவரைப் பற்றி............



தமிழ் கூறும் நல்லுலகில் கி. வா. ஜகந்நாதன் என்ற மூன்றெழுத்துப் பெயர் மிகவும் பிரசித்தமானது. கிருஷ்ணராய புரம் வாகதேவய்யர் குமாரர் ஜகந்நாதன் என்பதன் சுருக்கமே அந்த மூன்றெழுத்துக்களும்.

நூல் நூற்பது, கதர் கட்டுவது, பத்திரிகை படிப்பது, கவிதை எழுதுவது, காயத்திரி ஜபம் செய்வது, சொற்பொழிவு நிகழ்த்துவது, முருக உபாசனை செய்வது இவ்வளவும் இவருக்குச் சிறுபிராயத்திலேயே ஏற்பட்டுவிட்ட நற்பழக்கங்கள்.

தமது பன்னிரண்டாவது வயதில் இவர் எழுதிய முதல் பாட்டு அந்தக் காலத்தில் வடுவூர் துரைசாமி ஐயங்கார் நடத்தி வந்த ஒற்றுமை என்ற பத்திரிகையில் வெளியாயிற்று.

என்னுடைய முதல் பாட்டை நான் அச்சில் கண்டபோது அடைந்த ஆனந்தத்தைப் போல் இதுவரை மறுபடியும் அடைந்ததில்லை என்கிறார் இவர். பதினைந்தாவது வயதிலேயே எஸ். எஸ். எல். ஸி. படித்து முடித்துவிட்ட இவர் அதற்குப்பிறகு வேதாந்த புத்தகங்களில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் விளைவாக உலக வாழ்க்கையில் ஒட்டுதல் இன்றிச் சாமியாராகிவிட எண்ணி சேந்தமங்கலம் சுவாமிகளிடம் சென்று சந்நியாசம் கேட்டார்.

நீ உன் தந்தைக்கு ஒரு புதல்வன்; உனக்குச் சந்நியாசம் தரமாட்டேன்; ஆகையால் நீ ஊருக்கு திரும்பிச் சென்று முருகனை உபாசனை செய்துகொண்டிரு என்றுகூறி அனுப்பி விட்டார். அவர் சொன்னபடி முருக உபாசனை செய்யத் தொடங்கி விட்டார்.

தாய் தந்தையருக்குத் தெரியாமல் கூட சிற்சில நாட்களில் இவர் இரவு வேளைகளில் காந்தமலைக் குன்றத்து முருகன் கோயிலுக்குச் சென்று ஏகாந்தமாக முருகனை வழிபட்டுக் கொண்டிருப்பாராம்.

அந்தக் கோவிலில்தான் என்னுடைய முதல் சொற்பொழிவு நடைபெற்றது. அப்போதே 'முருகன் அருள் பெற்ற முனிவர்' என்று என்னை ஊரார் கூறுவார்கள் என்கிறார் இவர்.

சேந்தமங்கலத்தைச் சேர்ந்த ஐராவத உடையார் என்பவர் ஒருநாள் கி. வா. ஜ. வின் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு இவரைத் தம்முடைய ஊருக்கு வரும்படி அழைத்தார். சரி என்று புறப்பட்டுப்போய் உடையாருக்கு சொந்தமான தெய்வீக ஆச்சிரமத்தில் தங்கிவிட்டார். சேந்தமங்கலம் பஞ்சாயத்து சமாச தலைவரான உடையார் இவருக்கு விகிதர் வேலை கொடுத்தார். அதற்குச் சம்பளம் இருபது ரூபாய்.

இச்சமயம் காசியிலிருந்து அந்த ஆச்சிரமத்திற்கு வந்திருந்த காசி சுவாமிகள் என்பவர் இவருடைய தமிழ்ப் புலமையையும், கவிதைகள் புனைவதில் இவருக்குள்ள ஆற்றலை

டிம் கண்டு வியந்து இவரை உ. வே. சாமிநாதய்யரிடம் போய் தமிழ் படிக்கும்படி தூண்டினார். திரு. சாமிநாத ஐயர் அப்போது சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் அதிபராக இருந்தார். ஏற்கனவே அந்தக் கல்லூரியில் சேர்ந்து வித்துவான் பரீட்சைக்குப் படிக்க ஆவல் கொண்டிருந்த கி. வா. ஜ. வுக்கு காசி சுவாமிகளின் தூண்டுதல் உற்சாகம் அளித்தது.

பின்னர் ஒரு சமயம் உடையாருடன் இவர் வடலூருக்குப் போயிருந்தபோது அப்படியே சிதம்பரத்திலுள்ள சாமிநாதய்யரைப் பார்க்கச் சென்றிருந்தார். தமிழில் இவருக்குள்ள ஆற்றலைப்பற்றி உடையார் சாமிநாதய்யரிடம் எடுத்துச் சொல்லி இவர் தங்களிடம் தமிழ் படிக்க விரும்புகிறார் என்றார்.

அப்படியா? எங்கே ஒரு பாட்டுச் சொல்லு பார்க்கலாம் என்று கி. வா. ஜ. வைப் பார்த்து கேட்டார் ஐயர்; ' ஆடவர் நகையுற ' என்று தொடங்கும் கம்பர் பாடல் ஒன்றை இவர் சொன்னது; ஐயர் அதற்குப் பொருள் கூறும்படி கேட்டார். அந்தப் பாடலுக்கு இவர் கூறிய புதுமையான அர்த்தத்தைக் கேட்ட ஐயர் புளகாங்கிதம் அடைந்து இவர் சொன்ன அர்த்தத்திற்கு பழைய காலத்து ராஜாவாயிருந்தால் அட்சரலட்சம் தருவார் என்றார். பிறகு கி. வா. ஜ. வைப் பார்த்து கல்லூரியில் படிக்கிறாயா? என்னிடம் படிக்கிறாயா? என்று கேட்டார் ஐயர்.

தங்களிடம் தான் படிக்கப் போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்ற கி. வா. ஜ. அடுத்த ஆண்டிலேயே ஐயரைத்தேடிச் சென்னைக்கு வந்துவிட்டார். அப்புறம் ஐயரவர்களுடனேயே பல ஆண்டு காலம் இருந்து நிறையப் பாடங்கள் கேட்டார். ஐயர் புரிந்து வந்த தமிழ்த் தொண்டுகளில் தாமும் பங்கு பற்றினார். ஐயரின் ஞானப் புதல்வரென்ற பெருமைக்குரியவரானார். கி. வா. ஜ. விடம் ஐயரவர்களுக்குத் தனிப்பட்ட அன்பும் திருப்தியும் ஏற்படவே ஒட்டக்கூத்தர் பாடிய தக்கையாகப் பரணி நூலைத் திருத்திப் புதிய பதிப்பாக வெளியிடும் பணியில் தமது அன்புச் சீடரையும் ஈடுபடுத்தினார்.

ஒரு சமயம் ஐயர் அவர்களுடன் திருப்பனந்தாள் மடத்துக்கு சென்றிருந்த கி. வா. ஜ. வைக்கண்ட காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சமஸ்யை கூறி அதைப் பூர்த்தி செய்யும்படி கேட்டுக்கொண்டார். அடுத்த கணமே அதைப் பூர்த்தி செய்துவிட்டார் கி. வா. ஜ. அதைக்கண்ட தம்பிரான் மகிழ்ச்சியுற்று நீ சென்னையில் எங்கே தங்கியிருக்கிறாய்? என்று விசாரித்தார். வாடகை அறையில் தங்கியிருக்கிறேன்; பத்து ரூபாய் வாடகை என்றார் இவர். அப்படியா? மாசம் பத்து வீதம் ஒரு வருஷத்து வாடகை 120 ரூபாவை நான் தருகிறேன் என்றார் தம்பிரான். மாசம்பத்தா? என்று சிலேடையாகச் சொன்னார் கி. வா. ஜ.

திரு. சாமிநாதையர் கி. வா. ஜ. விடம் கொண்டிருந்த அன்பு எத்தகையது என்பதற்கு ஒரு சிறு உதாரணம்! திரு. கி. வா. ஜ. வை அண்ணாமலை யுனிவர்சிடி ' ரிஸர்ச் ' இலாகாவில் ஆசிரியராகப் பணியாற்றும்படி ஸிண்டிகேட் மெம்பரான திரு. க. வி. கிருஷ்ணசாமி ஐயர் அழைத்தபோது சீடனைப் பிரிய மனமில்லாத ஐயர், சாமியாரிடம் என் சீடனைப் பிரிய எனக்கு இஷ்டமில்லை என்று சொல்வதற்குப் பதிலாக, எனக்கும் ' ரிஸர்ச் ' இலாகாவில் ஒருவேலை போட்டுக் கொடுங்களேன் என்று சூக்ஷ்மமாகச் சொன்னாராம்.

1932-ல் கலைமகள் தொடங்கப்பெற்ற போது திரு. உ. வே. சாமிநாதையரிடம் கட்டுரை கேட்கும் பொருட்டு கலைமகள் சொந்தக்காரர் திரு. நாராயணசாமி ஐயர் சென்றிருந்தார். ஐயரவர் கலைமகளுக்கு கட்டுரை கொடுத்ததுமன்றி கி. வா. ஜ. வையும் உதவி ஆசிரியராக ஏற்றுக்கொள்ளும்படி சிபார்சு செய்தார். திரு. கி. வா. ஜ. கலைமக வில் ஆசிரியராக இருந்து வந்தாலும் அதைத்தமது சொந்தப் பத்திரிகை போல் கருதித் திறம்பட நடாத்தி வந்ததும் தமிழ் உலகம் அறிந்த செய்தியாகும்.

'' தமிழ்க்காப்பியங்கள் '' என்னும் இவரது நூலை சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. ' திருமுருகாற்றுப்படை அரசு ', ' வாகீச கலாநிதி ' என்ற பட்டங்களை காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அளித்தது. ' திருநெறித் தவ மணி '' என்ற பட்டம் மதுரை ஆதீனம், ' செந்தமிழ்ச் செல்வர் ' என்ற பட்டம் தரும புர ஆதீனம், ' உபந்நியாச சக்கரவர்த்தி ' என்ற பட்டம் புஷ்பகிரி சங்கராச்சாரிய சுவா மிகள் வழங்கியுள்ளமை. இவ்வளவும் இவருடைய புலமைக்கும், திறமைக்கும் கிடைத்த பெருமையாகும்.

இதுவரை இவர் முந்நூறு புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்கள். தமிழ் நாட் டில் மாத்திரமல்ல இலங்கை, பர்மா, மலேசியா, பிரான்ஸ், லண்டன் ஆகிய இடங்களில் கூட பேசாத சபையே இல்லை என்று சொல்லலாம். இலங்கைக்கு மாத்திரம் 40 வருடங் களுக்குள் 42 தடவைகளுக்கு மேல் வந்துள்ளார்கள்.

இவர் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டிய பெரியார்களில் பூஜ்ய ராஜாஜி அவர்கள் முக்கியமானவர்கள்.

1966-ம் ஆண்டு ஜுலை மாதம் சென்னையில் முதலமைச்சர் மு. பக்தவத்சலம் அவர் கள் தலைமையில் மிகச்சிறப்பாக மணிவிழாக் கொண்டாடினுர்கள். அதனைத் தொடர்ந்து ஆகஸ்டு மாதம் யாழ்ப்பாணம் முதல் தென்னிலங்கை வரை 20 நாட்களில் 22 இடத்தில் மணிவிழாக் கொண்டாடிச் சிறப்பித்தார்கள். யாழ்ப்பாணத்தில் 1-வது நாள் விழாவுக்கு மறுநாள் நாவலர் மகாவித்தியாலயத்தில் ' குரு சிரோமணி ' சிவஸ்ரீ க. கணபதீசுவரக் குருக்கள் தலைமையில் அந்தணர்களாகச் சேர்ந்து ஒரு பாராட்டுவிழா நடாத்தினுர்கள். அதனை ஐயா அவர்கள், எங்கே பாராட்டு விழா நடந்தாலும் '' யாழ்ப்பாணத்தில்தான் அந்தணர்களால் தனியாக பாராட்டு விழா நடாத்தப்பட்டது '' என்று பெருமையாகச் சொல்லுவார்கள். இவைகள் எல்லாவற்றையும் நாம் மனதில் சிந்தித்து ஆறுதல் பெறுவ துடன் அவருடைய புத்தகங்களைப் படித்தும் பயன் பெறுவோமாக!

---

## பருத்தித்துறை

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை என்ற ஊர் ஒன்று இருக்கின்றது. அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் இவர் பேசப் போயிருந்தார். கூட்டத்துக்கு வந்திருந்த புலவர் ஒருவர் தாம் இயற்றிய நூல் ஒன்றை இவரிடம் அளித்தார். உடனே இவர், ' இடத்துக்கு ஏற்ற கொடை இது ' என்றுர். எப்படி? என்று புலவர் கேட்டார். ' இது பருத்தித்துறை அல் லவா? இங்கே நூல் கிடைப்பது பொருத்தந்தானே! ' என்றுர் இவர்.

— கி. வா. ஜ. வின் சிலேடைகள் நூலிலிருந்து

உ

சிவமயம்

‘வாகீச கலாநிதி’ — ‘கலைமகள் ஆசிரியர்’

# பிரம்மஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களின்

# ஆத்ம சாந்தி அஞ்சலிப்பா

தொல்முருகு தவழ்தமிழின் கடலு மன்னன்
   தூயபெருவழிற் சைவநெறிச் சமுத்ர மன்னன்
கல்வியொடு கலைமலைமாய் நின்ற செம்மல்
   கலைமகளின் தனிப்புதல்வ ஞன அண்ணல்
வல்லமைசேர் வண்டமிழின் பெரும்பு தல்வன்
   வாகீச கலாநிதி,கி. வா. ஜகந் நாதன்
நல்லுயிரைக் கவர்ந்தனனே நமனு மின்றே
   நந்தமிழின் உயிரைவதை செய்ய லாமோ ?

செந்தமிழின் செழுமைதனை செகத்தில் என்றும்
   சிகரமென நிலைக்கவைத்த மகா மேதை
பைந்தமிழ்ம ஹோமஹோ பாத்தி யாயப்
   பாவலன் டாக்டர்உவே சாமி நாதச்
சுந்தரக் குருவீன்ற சீட ஞன
   சுகுணகுண வான்கிவா ஜகந் நாதன்
மந்தரமா மலையான தமிழாய் நின்ருன்
   மாமலையும் மாநிலத்தில் சரிய லாமோ ?

தீந்தமிழா ராய்ச்சிமஹா நாடு எல்லாம்
   தெய்வீகத் தமிழினிமை சொட்டும் வண்ணம்
தந்தனனே திரிகரண சுத்தி யோடு
   தண்டமிழின் தேன்பிலிற்றும் உரைகள் யாவும்
சுந்தரமாய்ச் சைவநெறி தழைத்து ஓங்கச்
   சுதந்திரமாய்த் தமிழ்ப்பாலம் சமைத்த செம்மல்
வந்தனனே வண்டமிழின் உருவ மான
   வாகீச கலாநிதியைக் காணு வோமோ ?

இளமுருகன் தலமான வளநீர் வேலி
    இராஜேந்திரக் குருவில்லம் பொலிய மர்ந்தே
அளவில்லாக் கவித்தமிழின் சிலேடை மாந்தி
    ஆனந்தம் தரும்அன்பன் பிரிய லாமோ ?
பழமான வைதிகக் கனியாம் அந்தப்
    பைந்தமிழின் பழரசத்தை அள்ளித் தந்தே
அழவைத்து ஆனந்தம் தந்த மேதை
    அவனியிலே கண்மூடி மறைய லாமோ ?

தித்திக்கத் தித்திக்கத் தீந்தமிழ் நூல்
    தெய்வீக நெறிகாட்ட ஆக்கித் தந்தாய்
எத்திக்கும் நின்தமிழே ஒலிக்கு தையா
    என்றுந்தன் திருமுகத்தைக் காணு வோமோ ?
பத்திக்கு வித்தாகும் உந்தன் வித்தை
    பாரினிலே சிவநெறியாம் அச்சின் ஆணி
வித்தகக்கவி கி. வா. ஜகந்நா தையர்
    விதிமுடித்தான் தமிழ்அன்னை வெம்பு கின்றாள்.

இலக்கியத்தின் இலக்கியமாம் இலக்ஷியத்தின் தலைவன்
    இன்தமிழின் சொல்லாண்மை இனித்தபெரும் அழகன்
கலக்குதமிழ்க் கனிரஸத்தில் காட்டிடுவார் போதை
    கவியெழுதும் வகையதனை ஊட்டிடுவார் மேதை
குலக்குமலர்த் தமிழ்கொய்து தொடுத்திடுவார் வள்ளல்
    கொஞ்சுதமிழ் மஞ்சுவை மிஞ்சிடுவார் செம்மல்
நலக்கவிதைக்கவி கி. வ. ஜகந்நாதன் வசமே
    நமன்தமிழைப் பயின்றிடவோ அழைத்தானே காலன் !

"கவிமாமணி" — "ஸாஹித்யஸாஹரம்"

**ந. வீரமணி ஐயர்**

உ

சிவமயம்

'கலைமகள் ஆசிரியர்' — 'வாகீச கலாநிதி'

# பிரம்மஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களின்

# பிரார்த்தனைப் பாக்கள்

விருத்தப்பா

செந்தமிழாம் பூந்தடத்தில் வளர்ந்து மல்கி
தேன்நிறைந்து பரிமளிக்கும் மலரே எங்கள்
சிந்தனைக்கு விருந்தான பலநூறு நூல்களாக்கி
செப்பமுற வெளியிட்ட அமிர்த மன்னுய் !
நிந்தனையும் வாழ்த்தெனவே கொள்ளு முன்றன்
சிந்தனையைச் சிந்தித்து வாடு கின்றேம்
புந்தியிலே நின்மறைவை எண்ணி யெண்ணி
புலர்ந்தநெஞ் சோடுநாம் புலம்பு கின்றேம்.

நுண்ணறிவால் சொற்பொழிவு நிகழ்த்தும் நின்றன்
நேர்நெறியை யாரறிவார் எங்கள் குருவே
கண்ணுள்மணி மகா மகோ உபாத்தியாயர்
கலாநிதியாம் சாமிநா தையர் தங்கள்
ஒண்ணரிய பொருளெல்லாம் சிந்தை தேக்கி
ஓயாத வான்மழை போல் பொழிந்துநின்றீர்
மண்ணுலகை நீத்துவிட்டீர் என்ற செய்தி
மனம் பதைத்துப் புலம்புகிறேம் நாங்களையா !

சீர் சேர்ந்த யாழ்ப்பாணம் பன்முறையாய்
திகழவந்து நீர்வேலிப் பதியுறை இராசக்குருக்கள்
பேர் பெற்ற இல்லத்தில் தங்கிமிக்க
பிரசங்கம் பலவூரிற் செய்த தேவே !
நேர்நெறியில் எமைவைத்து மகிழ்வுசெய் மன்னுநீயே !
நீணிலத்தில் நுமையிழந்து தவிக்கின்றேம் நாம்
ஏர்பெறவே நின் ஆன்மா சாந்திபெற
எழில் முருகன் பாதங்கள் போற்றுவோமே.

ஈழமணித் திருநாட்டில் அன்புகொண்டு
இடையிடையே யாழ்நகருக்கு வருகைதந்து
ஆழமுறும் அறிவுரைகள் அருமையாக
ஆய்ந்துதந்த ஜகந்நாத அண்ணல்நீயே
சூழஇருந் தெம்மோடு சிலேடைபேசி
சுவைபெறவே சிரிக்கவைத்த தெய்வமன்ஞய்
ஆழநினைந்து அல்லல்உற்று அயர்வு கொண்டோம்
அன்புபெற நின்ஆன்மா சாந்திபெறுகவே.

எண்பத்து இரண்டாண்டு இஞ்ஞாலத்தில்
இருந்துவாழ்ந்து பேரறிஞர் வாழ்த்தெடுப்பு
கண்மணிபோல் 'காந்தமலை' தனிலுறைந்து
கருணைமிகு முருகனடி மறவாயாகித்
தெண்ணிலவு ஒளிபோல்க் காட்சிதந்து.
திகழ்வாகீச கலாநிதியே பாலே!தேனே!!
மண்ணுலகில் நின்புகழை நாட்டியநின்
மன்ஆன்மா சாந்திபெறப் போற்றுவோமே.

ஆக்கம் :
பண்டிதர் நீ. சி. முருகேசு
( முருகு )

நீர்வைக் கந்தனடி அர்ச்சிக்கும்
இராசேந்திரக் குருக்கள் சார்பில்.

---

## பையன்

திருமணம் ஒன்றை விசாரிக்க இவர் போயிருந்தார். விசாரித்துவிட்டு அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். புறப்படும்போது தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு இவற்ருேடு பட்சணப் பொட்டலமும் கல்யாண வீட்டுக்காரர் இவரிடம் தந்தார். எல்லாவற்றையும் கையில் எடுத்துச் செல்வது சங்கடமாக இருக்குமென்று எண்ணி, ஒரு பையில் அவற்றை எல்லாம் போட்டுக் கொடுத்தார். ''பெரியவர்களுக்கு எல்லாவற்றையும் கையில் கொண்டுபோவது சிரமமாக இருக்கும் அல்லவா? இப்போது எளிதில் கொண்டு போகலாம். பை உங்களிடமே இருக்கட்டும்'' என்று சொல்லிக் கொடுத்தார்.

அதை வாங்கிக்கொண்ட இவர், ''ஆம், நாம் பெரியவனுகத்தான் வந்தேன், இப்போது பையனுகப் போகிறேன்'' என்றூர்.

— கி. வா. ஜ.வின் சிலேடைகள்



# மூன்றெழுத்துப் பேரொளி

## முப்புரிநூலினர்

கி. வா. ஜ. என்றால் கலைமகள் பத்திரிகை. நல்ல தமிழ், நல்ல சைவம், நல்ல நகைச்சுவை எல்லாம் உள்ள ஐயர் அவர்களைக் குறிக்கும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மகாமகோபாத்தியாய சுவாமிநாதஐயர், ஜகந்நாதஐயர் மூன்று தலைமுறையில் தமிழறிஞர்கள் குருசீட பரம்பரை நன்றாயமைந்தது.

திருமுறை விளக்கம், கந்தரலங்கார விளக்கம், எழுத்ததிகார விளக்கம், சொல்லதிகார விளக்கம் எல்லாம் இலகுவாக எழுதியவர், 56 ஆண்டுகளாக கலைமகளை வளர்த்துத் தமிழ் வளர்த்தவர்.

இலங்கைக்குப் பலமுறை வந்து நகைச்சுவை ததும்பத் தமிழும் சைவமும் பேசியவர். கலைமகளேயன்றி அமிர்தவசனி, மஞ்சரி ஆகிய மாத இதழ்களையும் மலரச்செய்து மனங்கமிழ் தமிழின் இளமைநலம் காட்டி விருந்தயரத் தந்தவர். தமிழ்க் கிழவனாரின் நல்லுரைகளைக் கோவைப்படுத்தியும், நினைவுகளை மஞ்சரியாக்கியும் அவர்தம் சரித்திரத்தை அகலமாக எழுதச் செய்தும் தமிழ் வளர்த்த செம்மலாயிருந்தவர்.

— க. கனகராசா, ஜே. பி.
( அதிபர் - மில்க்வைற் )

37660.



மணிவிழாவின் போது நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா
அவர்கள் பொன்னாடை போர்த்தல்.

Dr. U.V. ... ER LIBRARY
Besant Nagar
Chennai-90

உ

# காந்தமலை



கி. வா. ஜ............ மூன்றெழுத்து மந்திரம் இந்த மூன்றெழுத்துக்கள் தமிழ் இலக்கிய உலகில் ஓர் புரட்சியையே உருவாக்கிவிட்டது. இம் மூன்றெழுத்துக்கள் தான் எத்துணை ஆயிரம் ஆயிரம் தமிழ் இதயங்களை வென்றிருக்கின்றன......... எத்துணை ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு நல்வழி காட்டியிருக்கின்றன. சுருங்கக்கூறின், தனக்கென்று ஓர் இரசிக பரம்பரையையே உருவாக்கியிருக்கின்றன இந்த மந்திர எழுத்துக்கள்.

''கேட்டார் மணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப'' மொழிகின்ற சொற்றிறம் படைத்தவர். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகமென, மந்திரத்திற்குக் கட்டுப்பட்ட வேழமென மக்கள் கூட்டம் இவரது பேச்சில் மயங்கி நிற்கும். ஊசியோடு செல்லும் நூலைப் போல இவர் பேச்சோடு நகைச்சுவையும் சேர்ந்து மிளிரும். தனித்த உடை, தனித்த நடை (பேச்சில்-எழுத்தில்) ஏன்...... தனக்கென்று ஓர் தனித்த கலாச்சாரத்தையே உருவாக்கிக் கொண்டவர் திரு. கி. வா. ஜ. அவர்கள்.

''குருபக்தி'' என்பது இன்று ஏட்டளவில் நின்றுவிட்ட ஒன்று. ஏற உதவிய ஏணிக்கும், நதியைத் தாண்ட உதவிய நாவாய்க்கும் நன்றி சொல்வார் யார்......... ஆனால் திரு. கி. வா. ஜ. அவர்கள் இதற்குப் புறநடை. தனக்குத் தமிழுணர்வு ஊட்டிய உத்தம தானபுர வள்ளலை இவர் இறுதிவரை மறக்கவில்லை. இவரது பேச்சிலும், மூச்சிலும் ''குருபக்தி'' மணம் கமழும்.

காந்திக்கு ஒரு நேரு......... இது அரசியல் வாரிசு;
இராமகிருஷ்ணருக்கு ஒரு விவேகானந்தர்......... இது ஆன்மீக வாரிசு;
உ. வே. சாவிற்கு ஒரு கி. வா. ஜ......... இது செந்தமிழுக்கு வாரிசு.

காந்தத்திற்குக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உண்டு. கந்தனுக்கும் அத்தகு ஆற்றல் உண்டு. காந்தமலைக் கந்தனை வழிபடு கடவுளாகப் பெற்ற திரு. கி. வா. ஜ. அவர்களும் தனது உருவால், உள்ளத்தால், செயலால் மக்களைக் கவர்ந்திழுக்கும் காந்தமலைதான். இதில் ஐயமில்லை! தருமையாதீனப் பண்ணைப் பயிராகிய யான் எங்கள் கயிலைக்குருமணி கண்ட செந்தமிழ்ச் செல்வரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் நிழலாக, உயிராக, உயிர்மேவிய உடலாக வாழ்ந்து அவரது அனைத்துப் பணிகளுக்கும் கைகொடுத்த மாதரசிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— செ. வைத்தியநாதன்
வசந்தா - வைத்தியநாதன்

உ

## வாகீச கலாநிதி கி. வா. ஜ. அவர்களுக்கு

# அஞ்சலி

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட பெருமையைப் பெற்றுக்கொண்ட பெருந்தகை கி. வா. ஜ. ஐயா அவர்கள். எழுத்தாற்றலினுலும் இனிய உரைகளினுலும் எம்மையெல்லாம் தன்பால் ஈர்த்துக் கொண்ட பெருமை இவர்களுக்கு உண்டு. சொற் பஞ்சமற்ற திருவாயையும், கருத்துப் பஞ்சமற்ற திருவுள்ளத்தையும் கொண்டவராகையால் உலகளாவிய பெரும் புகழைந் தனதாக்கிக் கொண்டார். இத்தகைய அறிஞர்கள் அடிக்கடி இவ்வுலகில் தோன்றுவதில்லை. இவர்களை ஒருவகையில் அவதார புருஷர்கள் என்று கூறினுலும் அதில் மிகையொன்றுமில்லை.

முது பேரறிஞர் கி. வா. ஜ. அவர்களை நாற்பது ஆண்டுகளாக நான் அறிவேன்; அவர்களுடைய மணிவிழா, முத்துவிழா ஆகியவற்றில் கலந்து உரையாற்றிய பெருமை எனக்கு உண்டு. தமிழகத்தில் சென்னை மாநகரில் நடைபெற்ற ஒரு பெரு விழாவில் அவர்களின் தலைமையின் கீழ் உரையாற்றினேன். அவர்களின் இல்லம் ஒரு முருகன் கோயில்; அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் ஒரு மகாலட்சுமி; இவற்றை நேரிலே கண்டு அனுபவிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஐயா அவர்கள் எங்கள் நாட்டுக்கு அடிக்கடி வந்து உரையாற்றிச் சென்றுள்ளார். மணிக்கணக்காக அவர்களின் பேச்சைக் கேட்கலாம். எளிய-இனிய தமிழ் அவர் திருவாயில் கொஞ்சு தமிழாக வருவது ஒரு அற்புதமாகும், அவர்களின் கவிதை எழுதுமாற்றலை பண்டிதமணி ஐயா எவ்வளவு அழகாகப் பாடியுள்ளார்;

''செந்தமிழில் தேனெழுகிற் றெனஇனிய கவிகள்பல
உழுந்துருள முன்னெழும் உவமனிலாப் பெரும்புலவீர்
அழுந்திய தென்னுள்ளம் நுமதன்பொழுது கவியமிழ்தில்
எழுந்துவகை பொங்கியதால் எழுதுவல் பின்வருமாறு''

என்று பாடித் தனது நலம் பற்றியும் பாடலிலேயே பதில் அனுப்பினுர் பண்டிதமணியவர்கள்.

கலைமகளாசிரியப் பணியை கௌரவமான, தனித்துவமான பணியாக ஆற்றியமையால் பிற்கால இலக்கிய வரலாற்றில் ஐயா காட்டிய பாதை பெருமையையும் மகிமையுமுடையதாக விளங்கியது. எண்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து எண்ணுவனவற்றையும், எழுதுவனவற்றையும், பேசியவற்றையும் சமூக நலனுக்காக ஈந்து எல்லாம் வல்ல கலியுக வரதன் கந்தப் பெருமானைத் தன் உயிர்க்குறுதியாக்கிக் கொண்டு பயணமாகி விட்டார் ஐயா.

வேறு என்ன வேண்டும்! ''தனிவழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே'' இதுவே எம்மவரது பிரார்த்தனையாகவும் அமையட்டும்.

ஐயாவின் திருவடிகளுக்கு வணக்கம்.

**ஓம் சாந்தி !**

— **தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



எமது இல்லத்தில் நாள்தோறும் ஈடுபடும்
தியான நிலையில் ஐயா அவர்கள்.

# ஸ்ரீ கி. வா. ஜ. ஒரு கற்பகதரு

தெல்லிப்பழையைச் சேர்ந்த வறுத்தலை விளான் என்னுங் கிராமத்தில் பிள்ளையார் கோயில் ஒன்று உண்டு. அக்கோயில் வீதிக்கு அண்மையில், தென் திசையில் உள்ள ஓர் ஆச்சிரமத்தில் மகா வித்துவான் சி. கணேசையா அவர்கள் தமது அந்திய காலத்தில் வாசஞ்செய்து வந்தார்கள். ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள், கோயிலுக்கு அருகிலுள்ள ஆலமரத்தின் கீழிருந்து ஐயா அவர்கள் அடியேனின் வேண்டுகோளை ஏற்று இலக்கணம் தொடர்பான சில விடயங்களை விளக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது மோட்டார் வண்டியொன்று ஆச்சிரமத்திற்குப் பக்கத்தில் வந்து நின்றது. வண்டியிலிருந்து வித்துவான் கி. வா. ஜகந்நாதன் அவர்களும் நீர்வேலி கந்தசுவாமி கோவில் அர்ச்சகர் சு. இராஜேந்திரக் குருக்களும் இறங்கினார்கள். வித்துவான் ஜகந்நாதன் அவர்களைக் கண்ட ஐயா அவர்கள் எழுந்து அவரிடம் செல்வதற்கு முற்பட்டார்கள் இதனை அவதானித்த வித்துவான் ஜகந்நாதன் அவர்கள் ஓடோடி வந்து, ஐயா அவர்களை இருக்கச்செய்து நிலத்தில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள். பின்னர் எழுந்து, ''தமிழ் மலையைக் கண்டேன்'' என்று பெருமிதத்துடன் கூறினார்கள், ஐயா அவர்கள் வித்துவானுக்கு விபூதி வழங்கி, பின்னர் கற்கண்டுங் கொடுத்து, அவரை நோக்கி ''உங்களில் சுவாமிநாதையரைக் காண்கின்றேன்'' என்று கூறி அவரைத் தமக்கு அருகில் இருக்கச் செய்து அன்போடு உரையாடிக்கொண்டிருந்தார்கள். இந்நிகழ்ச்சி வித்துவான் ஜகந்நாதன் அவர்கள் தமிழ்ப் பேரறிஞர்களுக்குப் பெருமதிப்பளிக்கும் பெருமிதம் அளிக்கும் பண்புள்ளம் படைத்தவர்கள் என்பதனையும், ஐயா அவர்கள், வித்துவான் ஜகந்நாதன் அவர்களில் பெருமதிப்பு வைத்திருந்தார்கள் என்பதனையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

1966 ஆம் ஆண்டு வித்துவான் ஜகந்நாதன் அவர்களின் மணிவிழா இலங்கையில் பல இடங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபையினரும், நாவலர் மகா வித்தியாலயத்தில் மணிவிழாவை நடாத்தினார்கள். அன்று வித்துவான் ஜகந்நாதன் அவர்கள், 'வேதநெறி' என்பது பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மிக மிக ஆழமான கருத்துக்களை அள்ளியள்ளித் தந்தார்கள். அக் கருத்துக்களை மிக இலகுவான தமிழில் எடுத்துரைத்தார்கள். அவருடைய பேச்சு, கேட்டார்ப் பிணிக்குந் தகையதாயும் கேளாதோரை வேட்கும் தகையதாயும் அமைந்திருந்தது. விழா முடித்து வீடு திரும்பும்போது என்னுடன் வந்த ஓர் அறிஞர் ''என்மனதிற் குடிகொண்டிருந்த வேதங்கள் பற்றிய கருத்துக்கள் தவறானவை என்பதை வித்துவானுடைய சொற்பொழிவிலிருந்து அறிந்து கொண்டேன். வேதங்கள் சைவசமயத்தவர்களின் அரும்பெரும் பொக்கிஷங்களாகும். அவைகளிலுள்ள விடயங்களை சைவசமயத்தவர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும்'' என்று கூறியமை இன்றும் என் மனத்தில் பசுமையாக இருந்து வருகிறது.

வித்துவானின் சொற்பொழிவுகளில் ஒரு தனித்துவமும் தெய்வீகக் களையும் உண்டென்பதும் அச் சொற்பொழிவுகள் பலரை நல்வழிப்படுத்தியிருக்கின்றன என்பதும் ஒரு சிறிதும் மிகையாகா.

அறிஞர்கள் பலருக்கு மணிவிழாக்கள் நடைபெற்றுள்ளன. அவ்விழாக்களெல்லாம் அவர்கள் பிறந்த கிராமத்திலோ நாட்டிலோ தான் நடைபெற்றன. ஆனால், வித்துவான் ஜகந்நாதன் அவர்களின் மணிவிழா அவர் பிறந்த தமிழ் நாட்டில் மாத்திரமன்று, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, பம்பாய், டில்லி முதலான இடங்களிலும் நடைபெற்றன. இது, வித்துவான் ஓர் அசாதாரண புருஷர் என்பதையும்; அவர் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இருந்திருக்கின்றார் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

அன்பர்களின் வினாக்களுக்கு 'விடையவன்' என்ற புனைபெயரில் வித்துவான் ஜகந்நாதன் அவர்கள் கலைமகளில் எழுதி வந்த விடைகள் பல துறைகளையும் சார்ந்த நூல்களில் அவருக்கு இருந்த பயிற்சியை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

வித்துவான் ஜகந்நாதன் அவர்கள் ஓர் கற்பகதரு, முருகசம்பாத்தியம் உள்ளவர். அவரது மறைவு சைவஉலகத்திற்கும், தமிழ் உலகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென யாமெல்லாம் முருகப்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

— க. வைத்தீசுவரக் குருக்கள்
காரைநகர்

---

## கொய்யாப்பழம்

ஐயா அவர்கள் அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள் அப்போது ஓர் அன்பர் கொய்யாப்பழம் வாங்கிக்கொண்டு வந்திருந்தார். அப்போ ஐயா அவர்கள் எந்தப் பழத்திலும் கொய்யாப்பழமே சுவையுடையது என்றார்.

ஏன்? மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் என்ற முக்கனிகள் சுவை இல்லையா என்று ஓர் அன்பர் வினவினார்.

''அவையும் சுவையுடையனவே''

அப்படியானால் கொய்யாப்பழம் மட்டும் சுவையுடையது என்றீர்களே?

ஐயா அவர்கள் நான் இந்தக் கொய்யாப்பழத்தை சொல்லவில்லை, எந்தப் பழமானாலும் கொய்த பழத்தைவிட கொய்யாத பழமே சுவையுடையது என்றேன். அதாவது தானே முதிர்ந்து உதிர்ந்தால் சுவை மிகுதியாக இருக்கும் என்று கூறினார்கள்.

— ஸ்ரீ கி. வா. ஜ. ஐயாவின் சிலேடை



குருக்களின் மகள் வீட்டு வாயிலில் ஆரத்தி எடுத்து வரவேற்றல்



குருக்கள் வீட்டுக் குடும்பத்தினருடன் ஐயா அவர்களும்,
பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களும்,
(பேராசிரியரின் பாராட்டு விழாவிற்கு வருகை தந்தபோது)

# அர்ப்பணம்

1948 என்ற ஞாபகம். கண்டியில் தமிழ் விழா நடைபெற்ற காலம், அவ் விழாவிற்கு அருள்மிகு நீர்வேலி கந்த சுவாமி தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள் அவர்களும் அவ் விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அங்கேதான் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜ. அவர்களுக்கும் குருக்களுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. குருக்கள் அவர்கள் வேண்டிக் கொண்டதின்படி திரு. கி. வா. ஜ. முதன்முதலாக யாழ்ப்பாணம் வருகை தந்தார். அன்று தொட்டு எப்போது யாழ்நகர் வந்தாலும் அவர் வீட்டிலேயே தங்கி நிற்பார். அக்காலத்தில் அவர்கள் குடும்பமே இவரை அன்புடன் உபசரித்து வந்தனர். குருக்கள் அவர்களின் மூத்த புதல்வி (அப்போது திருமணம் ஆகாதவர்.) செல்வி இந்திரா தனது அன்பாலும் பண்பாலும் அவரைக் கவர்ந்ததினுல் கி. வா. ஜ. அவர் மேல் தனது மகள் போன்ற அளவிலாத அன்பு கொண்டார். இதனுல் குருக்கள் குடும்பத்தினருக்கும் கி. வா. ஜ. குடும்பத்தினருக்கும் நெருங்கிய பிணைப்பு ஏற்பட்டது. குருக்கள் அவர்களை தனது உடன் பிறவா சகோதரரென அடிக்கடி சொல்லுவார். இந்நாட்களில்தான் கி. வா. ஜ. வுடன் எனக்கு பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. 1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 வரை நான் அவருடன் நிழல் போல் தொடர்ந்து எங்கும் சென்றேன்! அந்த வேளையில் என்னைப்பற்றி ஒரு கவிதை எழுதித் தந்தார். அது பின்வருமாறு,

அன்புக்கினியான் இன்சொல்லான்
இங்கிதமே உடையான்
இனியனுக்குத் தன் காரில்
இடம் கொடுத்தே உதவி
அன்னைக்குரிய அன்பு செய்வோன்
பார்த்தசா ரதியென்
றமைந்ததொரு புதுப்பெயரை
அன்புடனே ஏற்றோன்
கலைப் புயருங் கடலெனவே
பலசெய்தி யறிந்த
கனவான் நற் றமிழிலுள
இனிய சுவை தேர்வோன்
எனைப் பெரிய ராணுலும்
அன்பின்றேல் மதியா
இயல்புள்ளோன் முத்துவேல்
எனும் பேரோன் கொள்க.

— கி. வா. ஜ.
25 - 06 - 1962

இன்னெரு சந்தர்ப்பத்தில் பாரதியார் பாடிய

சுற்றிநில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்

என்றதை, ஒரு சிறு பாட பேதத்துடன்

''சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வரும் முத்துவேல்''

என்று நான் பாடலாம் அல்லவா, என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

இன்னொரு கடிதத்தில் குருக்கள் அவர்களுடைய குடும்பத்தினர் அன்பை நான் விசாரிக்கும் போதெல்லாம் உங்களையும் சேர்த்தே நினைக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

குருக்கள் குடும்பமும் உங்கள்குடும்பமும் அன்பேமயமாக விளங்குகின்றது என்பார்.

இந்த மகானுடைய மறைவு பற்றிய செய்தியை இந்திய வானொலி 4 - 11 - 88 பி. ப. 7 - 15 மணியளவில் ஒலிபரப்பிய போது நாம் எல்லோரும் கேட்டு மனம் கலங்கினோம்.

இவர் பிரிவால் வாடிவதங்கும் குடும்பத்தினருக்கு எமது மனக்கவலையையும், ஆழ்ந்த துயரத்தையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

வாழ்க! அவர் புகழும் தமிழ்த்தொண்டும்.

— க. ச. முத்துவேற்பிள்ளை


---

## ஓவியர்கள் தேடவேண்டாம்

காவியம் சொல்லோவியம் - அதைப்படிக்கும் பொழுதே ஓவியக்காட்சி தானே அமைகின்றது. உருவம் இல்லாத பொருள்களையும் உணர்ச்சிகளையும் உள்ளம் உணரும்படி செய்து விடுகின்றது. காவியத்துக்கு உள்ள பல இயல்புகள் ஓவியத்துக்கும் உண்டு. உலகில்காணும் பொருள்களின் குறைபாடுகளைப் போக்கி, அவற்றுக்கு ஓர் அழகை ஊட்டி, நித்தியத்துவத்தைத் தருவதில் காவியமும் ஓவியமும் ஒரே நிலையில் இருப்பவை. இரண்டும் வெறும் உருவத்தை மாத்திரம் காட்டுவதோடு நில்லாமல் உணர்ச்சிகளையும் காட்டும் போது சிறப்பை அடைகின்றன.

சங்ககாலக் காவிய உலகத்தின் காட்சிஒவ்வொன்றும் ஒவ்வொரு சித்திரம். கலைத்திறம் கைவந்த ஓவியர்களுக்கு சங்கநூல் ஒருபெரிய களஞ்சியம். வண்ணஓவியங்களும் புனையாஓவியங்களும் வரைவதற்குப் பொருள் எங்கே என்று தேடவேண்டாம். சங்க நூல்களிலே புகுந்தால் பல்லாண்டுகள் ஓவியம் படைக்கப் பண்டம் இருப்பதைக் காணலாம்.

— கி. வா. ஜ.



1988-ம் ஆண்டு மார்ச் மாதம் சதாபிஷேக விழா கொண்டாடியபோது
மகள் இந்திரா விளக்கேற்றி வழிபடுதல்.



சதாபிஷேக விழா கொண்டாடியபோது குருக்கள் வீட்டு அங்கத்தவர்கள்

# வாகீச கலாநிதி

கௌரவப் பட்டங்கள் அவற்றைப் பெறுபவர்களின் அறிவாற்றலுக்கோ குண வியல்புக்கோ பொருத்தமானவையாய் அமைவது மிகக்குறைவென்றே கூறலாம். வித்துவான் கி. வா. ஜகந்நாதனவர்களுக்குக் காஞ்சிப் பெரியவர் வழங்கிய வாகீச கலாநிதி என்னும் விருது மிக மிகப் பொருத்தமானது. தமது பேச்சிலும், எழுத்திலும், செய்யுளிலும், உரைநடையிலும் சொற்களை 'வெல்லும் சொல் இன்மை அறிந்து' வழங்குகின்ற வித்துவானவர்கள் வாகீசராயே வாழ்ந்ததோடு, காவியம், ஓவியம், இசை, சிற்பம் முதலிய கலைகளுக்கும் கல்விகளுக்கும் உறைவிடமாக கலாநிதியாயும் விளங்கினார்.

பல்கலைப் புலவராய்ப் பலதுறை அறிஞராய்த் திகழ்ந்த கி. வா. ஜ. அவர்கள் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் ஓர் இணைப்புப் பாலமாயும் இருந்தார். இந்த நாட்டோடு அவர் கொண்ட தொடர்பு நாற்பது ஆண்டுகளின் முன்பு தொடங்கியது. பலமுறை அவர் இங்கு விஜயம் செய்திருக்கிறார். இலங்கைக்கு வரத்தொடங்கிய காலத்திலிருந்தே நீர்வேலித் தொடர்பு தொடர்ந்து வந்தது. அவரது பேச்சு நிகழாத ஊரே இங்கில்லை என்னுமளவுக்கு எங்கும் சென்று விரிவுரையாற்றினார். சொல் முழக்கங்கள், பொழுது போக்குக் கதைகள், கண்டனங்கள், கீழ்த்தரமான நகைச்சுவைகள் ஆகியவற்றுள் எதுவுமின்றித் தமக்கேயுரிய ஒரு தனிநெறியில் இனிமையாய்ப் பேசிச் சபையோரைக் கவர்ந்து இன்புறுத்துபவர் அவர். சிறந்த மேடைப் பேச்சுக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தது அவர் பேச்சு. மேடைப் பேச்சுப் போலவே அவரது உரையாடலும் சுவைமிக்கது.

நீர்வேலியில் இராஜேந்திரக் குருக்களின் இல்லத்திலிருந்து கி. வா. ஜ. அவர்கள் விரிவுரையாற்ற பிறவூர்களுக்கு மோட்டார் வண்டியிற் புறப்படும்போது நாங்களும் சிலர் அவரோடு சேர்ந்து செல்வது வழக்கம். செல்லும் இடங்களில் அவரது மேடைப் பேச்சைக் கேட்டுச் சுவைத்ததும் அங்கங்கே நிகழ்ந்த சில சம்பவங்களையும் போகும் போதும் மீண்டு வரும்போதும் நடந்த உரையாடலையும் கண்டும் கேட்டும் ஆனந்தத் தித்ததும் அரிய அனுபவங்கள். வாகீச கலாநிதி மறைந்து விட்ட இவ்வேளையில் அவற்றுட் சிலவற்றை நினைவு கூர்தல் பொருத்தமாகும்.

மாலை மயங்கும் வேளையில் மறவன் புலவு என்னும் ஊரை நோக்கிப் பிரயாணம் தொடங்கியது. காரின் முன்னாசனத்தில் அமர்ந்திருந்த வாகீச கலாநிதி, மறவன் புலவு என்ற பெயரிலுள்ள புலவு என்பதற்குப் பொருளென்ன? என்று வினவெழுப்பினார். வயல் என்றும் வெறுந்தரை என்றும் ஏதேதோ பொருள்களை அன்பர்கள் கூறினார்கள். மறவன் புலோ என்று சொல்லும் வழக்காறும் இருக்கிறது. புலோப்பழை புலோலி என்ற ஊர்ப்பெயர்களும் உண்டு ஆகையால் வேறு பல பெயர்கள் போல இதுவும் சிங்களப் பெயராயிருக்கலாம், என்று என் கருத்தை வெளியிட்டேன். அவர் அதை ஏற்கவில்லை. மறவன் புலம் என்றே இருக்கட்டுமென்று தீர்ப்பளித்து விட்டார். மறவன் புலத்து விநாயகரால

யத்து வீதியில் காரிலிருந்து இறங்கி ஞேம். பரந்த வயல் நடுவே தாமரைக் குளத்தருகே அமைந்திருந்த ஆலயத்தின் இயற்கைச் சூழல், கவியுள்ளமுள்ள வாகீசரை வசீகரித்தது. ஸ்ரீ காந்தா புத்தக சாலையதிபர் திரு. கணபதிப்பிள்ளையவர்கள் அகமகிழ்ந்து வரவேற்ருர்கள். கூட்டம் தொடங்கச் சற்றுத் தாமதமாகுமென்றும் பிள்ளையாருக்குப் பூசையாகப் போகிற தென்றும் தெரிவித்தார்கள். விநாயகப் பெருமானைக் கும்பிடச் சென்ற வாகீசர், மகாமண்டபத்துள் நின்று கைகூப்பி மெல் லிய குரலில் தோத்திரம் பாடிக்கொண்டி ருந்தார். என்ன தோத்திரம் பாடுகின்ருர் என்று அறியுமாவலில் அவரை அணுகிக் காது கொடுத்தேன். பாடல்களின் இறுதி யடியைக் கேட்டதும் வியப்படைந்தேன் ...... 'விநாயகனை மறவன் புலத்திற் கண் டேனே' என்று முடிவுபெறும் புதிய பாம லர்கள் கவியரசர் நாவிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்தன. பழைய வாகீசரையும் சம்பந்தரையும் சுந்தரரையும் நினைத்துக் கொண்டேன். ஏழாமெட்டாம் பாட்டின் போது தீபாராதனை தொடங்கி விட்டது. பூசை முடிந்ததும் நான் வெளியே ஓடிவந்து அழைப்பாளரிடம் தகவலைத் தெரிவித்தேன், அவர்களுடைய வேண்டு கோளுக்கிணங்கி விழா மேடையில் வைத்து வரவேற்புரை யும் தலைமையுரையும் முடிவதற்கிடையில் மிக வேகமாய்ப் பாமாலையை எழுதிக் கொடுத்து விட்டார்கள். பின்பு அவர் நிகழ்த் திய சமயப்பேச்சு, தேன்மாரியாயிருந்தது. மறுநாள் ஆசிரியர் கணபதிப்பிள்ளை வாடிய முகத்துடன் நீர்வேலியில் வாகீச கலாநிதி யின் முன்வந்து நின்று ஐயா, அந்தப் பதிகம் நேற்று எங்கோ மறைந்துவிட டதையா' என்று அழாக்குறையாக முறை யிட்டார். ஐயா அவர்கள் அப்படியா! அது போனது போனதுதான், இனிவராது என்று முடிவாகக் கூறிவிட்டார்கள். அவர் சரஸ்வதி கடாட்சம்பெற்ற கவிஞர் என்பது நிச்சயமானது.

யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள தீவொன்றில் இரவு எட்டு மணியின் மேல் கூட்டம் தொடங்குகிறது. பாடசாலை மண் டபம் சிறிதாயிருந்ததால் கூடியிருந்த சிறுவர் களும் முதியவர்களும் ஆரவாரம் செய்து கொண்டிருக்கிருர்கள். மின்ஞெளி வசதி யில்லாததால் தூரத்தில் கூடிநிற்கும் தமி ழாசிரியர்களையும் மேடையில் இருந்தோர் பார்க்க முடியவில்லை தலைமை தாங்கிய வி ஏ. கந்தையா அவர்கள் காலத்தையும் இடத்தையும் கருதாமல் முன்னுரையை விரிவுரையாக்கிக் கொண்டிருந்தார். இந்த நிலையில் இவர்களுக்கு இலக்கிய இன்பம் பற்றிக் கி. வா. ஜ. என்ன பேச முடியும்? அரைமணியுள்தம்பேச்சை முடித்துவிடுவார் என்று நாங்கள் பேசிக்கொண்டோம்.

பேச எழுந்த வாகீசர் பாடத்தொடங்கி விட்டார்! முருகனையும் குருவையும் போற் றும் வழக்கமான பாடல்களின் பின்பும் பல பாட்டுகள். இதில் ஆச்சரியம் என்னவெனில் சங்க காலந்தொடங்கி இக்காலம் வரை தோன்றியிருக்கும் எந்த இலக்கியப் பாடலை யும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. தாலாட்டும் ஒப்பாரியும் கும்மியும் தெம் மாங்கும் என்று அவ்வளவும் நாட்டார் பாடலாகிய கிராமியக் கவிதைகளை இசை யோடு பாடிப் பாடி விளக்கிப் பேசிஞர். பல்சுவையமைந்த கதாப்பிரசங்கம் போலி ருந்த அந்த நீண்ட பேச்சைச் சிறுவர் உட்படச் சபையோர் திறந்த வாயோடு கேட்டு மகிழ்ந்தனர்.

காலமும் இடமும் அறிந்து திடீரெனப் பேச்சைத் திசை திருப்பிவிட்ட அவரது சமயோசித சாமர்த்தியத்தை எண்ணி வியந் தோம்

கட்டுரையாளர், கதாசிரியர், கவிஞர் உரையாசிரியர், விரிவுரையாளர், பத்திரி காசிரியர், பண்பாளர் என்றிவ்வாறு பலவ டிவங் கொள்ளும் ஒரு தெய்வம் போல் விளங்கிய அம்மனிதர் இன்று மறைந்து விட்டார். எனினும் அவர் எழுதிக் குவித்த அரிய நூல்கள் அவருக்கு நிகராக எம்முன் இருக்கின்றன. அவற்றைப் படித்துப் பயன் பெறுவோம்.

— ச. பஞ்சாட்சரசர்மா
கோப்பாய்

உ

முருகன் துணை

# அஞ்சலி

சுமார் ஐம்பதாண்டுக் காலம் பத்திரிகை ஆசிரியராய், சிறந்த பேச்சாளராய், பண்பமைந்த சிறுகதை எழுத்தாளராய், பக்தியைப் பெருக்கும் அடியாராய், சங்க இலக்கியம் - பக்தி இலக்கியம் இரண்டுக்கும் எளிய, தெள்ளிய விளக்க உரையாசிரியராய் விளங்கியவர் கலைமகள் ஆசிரியர், வாகீச கலாநிதி திரு. கி. வா ஜ. ஐயா அவர்கள். இந்த மூன்றெழுத்தைத் தமிழ்கூறும் நல்லுலகம் எல்லாம் போற்றியது, பாராட்டியது.

திருமுருகனின் பக்தரான அவர் குன்றுதோறாடும் குமரனைப்பற்றிப் பேசினால் அன்பும், பக்தியும், கனிவும் இழைந்து வரும். கேட்பவர் உள்ளத்தைப் பக்திப் பரவசத்தால், முருகனின் தண்ணளியால் நிரப்புவார்கள். திருநாவுக்கரசுப் பெருமான் உழவாரப்படைப் பணி செய்தே இறையருள் பெற்றதுபோல் திரு. கி. வா. ஜ. ஐயா அவர்களும் அழகன் குமரனின் சிறப்புக்களைச் சொல்லியே, மனதில் வந்தித்தே தம் எண்பத்திரண்டு அவைகளைக் கழித்தார்.

தமிழே மூச்சாக, குமரன் நாமமே மனமாக வாழ்ந்த பேரறிஞர் இன்று நம்மிடையே இல்லை. ''தமிழ் இலக்கியப் பேரறிஞர் ஒருவரைத் தமிழ் உலகம் இழந்துவிட்டது'' என்று இந்திய குடியரசுத் தலைவர் தம் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்த் தாயின் தவப்புதல்வனை இழந்துவிட்ட துக்கத்தில் நாம் எல்லோரும் - நம்மூர் மக்கள் எல்லோரும் பங்குகொள்கிறார்கள்.

**திரு கி. வா. ஜ. ஐயாவின் நாமம் வாழ்க !**

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்.